**கலிகமுவ பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 14 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 16 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினாலான தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கலிகமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளது பொருட்கணிப்புச் சிபார்சுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின்போது அகற்றப்பட்ட ரூபா 256,626 க்கான தளபாடங்களதும் உபகரணங்களதும் பெறுமதி மூலதனப் பயன்பாட்டிற்கான வருவாய்ப் பங்களிப்புக் கணக்கில் சீராக்கல் செய்யப்படாது திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டமையால் மூலதனப் பயன்பாட்டிற்கான வருவாய்ப் பங்களிப்புக் கணக்கின் மீதி அதேயளவு அதிகரித்தும் திரண்ட நிதியம் அதேயளவு குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடங்கிய 13 ஏக்கர், 95 பர்ச்சஸ் காணியின் 15 பிரிவுகள் மற்றும் காணியின் அளவு குறிப்பிடப்படாத 05 காணித் துண்டுகளது பெறுமதி மதிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படாமையால் நிலையான சொத்துக்களது பெறுமதி பிழையின்றிக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) இயந்திர மற்றும் இயந்திரசாதனப் பட்டோலையின் பிரகாரம் பெறுமதி குறிப்பிடப்படாத 93 விடயங்களது 763 கூறுகள் இருந்ததுடன், பெறுமதி கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படாமையால் சொத்துக்களது பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) தளபாடங்கள் மற்றும் பொருத்திகளது பட்டோலையின் பிரகாரம் 22 விடயங்களது 34 கூறுகளுடைய பெறுமதி மதிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படாமையால் சொத்துக்களது பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டினது செலவினக் கடன் கொடுத்தோர் ரூபா 12,563,995 ஆகக் காட்டப்பட்டிருந்தபோதும், கொடுப்பனவு உறுதிச் சான்றின் பிரகாரம் ரூபா 65,767 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) சொத்துக்கள் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானத்திற்குள்ளாகியபோதும், நிதிக்கூற்றுக்களில் தேய்மானத்திற்கான நிதியேற்பாட்டுக் கணக்கு காட்டப்பட்டிருக்கவில்லை.

(எ) நூலகப் புத்தகங்களுக்குத் தேய்மானம் மேற்கொள்ளப்பட்டிராததுடன், 2015 ஆம் ஆண்டின்போது நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா 272,472 பெறுமதியான புத்தகங்கள் நூலகப் புத்தகக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியம் மற்றும் குறைவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக் கூற்றுக்களின்படி ஒரு கணக்கீட்டு விடயத்தின் மீதி ரூபா 1,523,417 ஆகும். அவற்றுடன் தொடர்புடைய உப பதிவேடுகள் / அறிக்கைகளின் பிரகாரம் கணக்குகளது மீதி ரூபா 1,663,667 ஆகியமையால் ரூபா 140,250 வித்தியாசம் நிலவியது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

(அ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கும் கூடுதலாக அறவிடப்பட வேண்டியதாகவிருந்த ஊழியர் கடன் மீதி ரூபா 95,000 ஆகும்.

(ஆ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கும் கூடிய கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகளது மீதி ரூபா 2,584,402 ஆகும்.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | |
| (i) நி.பி 396 | ஆறு மாதங்களைக் கடந்த ரூபா 36,748 பெறுமதியான 34 காசோலைகள் தொடர்பாகக் குறித்த பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ii) நி.பி 571 | காலங்கடந்த ரூபா 489,762 கூட்டுத் தொகையுடைய 289 வைப்பு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 3,954,917 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 8,148,969 ஆகும். இதனால் மீளாய்வாண்டின் நிதிப் பெறுபேறுகளில் ரூபா 4,194,052 நலிவு தென்பட்டது.

**2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு**

நிதிசார் கூற்றுக்களில் ரூபா 4,194,052 நலிவு ஏற்படுவதற்கு 04 வருவாய் விடயங்களின் குறைவும் 04 செலவின விடயங்களின் அதிகரிப்பும் பிரதான காரணிகளாயின.

**2.3 வருவாய் நிர்வாகம்**

**2.3.1 வருவாய்ச் சேகரிப்பிலான செயலாற்றல்**

செயலாளரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிடப்பட்ட வருவாய், உள்ளவாறான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் வருமாறு.

| | வருவாயினது தோற்றுவாய் | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையில் அறவீடு | 2015 ஆம் ஆண்டிற்கான பட்டியல் தொகை | ஆண்டிற்கான பட்டியலில் அறவீடு | 2015 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவை மீதி | ஆண்டிற்கான பட்டியலிடப்பட்ட தொகையில் நிலுவை | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2015.12.31 இல் உள்ளவாறான நிலுவை | | | | | | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வை வரியும் | 542,193 | 346,782 | 1,710,907 | 1,233,347 | 195,411 | 477,560 | 672,971 |
| (ii) | குத்தகை வாடகை | 526,646 | 1,500 | 2,416,022 | 2,299,392 | 525,146 | 116,630 | 641,776 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 77,300 | 73,500 | 687,868 | 687,868 | 3,800 | - | 3.800 |
| (iv) | ஏனைய வருவாய் | 9,310,211 | 6,830,074 | 9,957,970 | 2,793,739 | 2,480,137 | 7,164,231 | 9,644,368 |

## 2.3.2 தீர்வை வரி மற்றும் ஏக்கர் வரி

தீர்வை வரி மற்றும் ஏக்கர் வரி என்பவற்றைக் கொடுப்பனவு செய்யாமை தொடர்பாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அவ்வரிகளை அறவிடுவதற்கோ, அவ்விடயங்களுக்கு உரித்தானவர்களது சொத்துக்களைத் தடை செய்து விற்பனை செய்வதற்கோ அல்லது அறவீடுகளை மேற்கொள்வதற்கோ இயலும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளபோதும், நெடுங்காலமாக வரி அறவிடப்படாதிருந்தும் சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்தன. 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த தொகை ரூபா 640,248 ஆகும்.

## 2.3.3 தொலை பேசிக் கோபுரக் கட்டணம்

சபையின் அதிகாரத்துக்குட்பட்ட இடங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 16 தொலை பேசிக் கோபுரங்களுக்கு வியாபார வரியாக ரூபா 48,000 சபையால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

சபரகமுவ மகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என்பவற்றின் மூலம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 46,075,650 பெறுமதியான வாகனங்கள், 14 இயந்திர சாதனங்கள் என்பவற்றைச் சபையின் பெயரில் சுவீகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) 2014 பிரதேச சபையைச் சக்திமிக்கதாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் அமுலாக்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகளை இனங்காண்பதற்கும் அவற்றைப் பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாமையால், அச் செயற்திட்டத்திற்கெனப் பெறக்கூடியதாக இருந்த ரூபா 7,000,000 தொகையில் ரூபா 4,000,000 மாத்திரமே பெறப்பட்டதுடன் அதில் செலவழிக்கப்பட்டிருந்த தொகை ரூபா 2,165,274 ஆகவுமிருந்தது. அதற்கமைய, பெறப்பட்ட நிதி ஏற்பாட்டிலும் ரூபா 1,834,726 உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சிற்குத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபையால் சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அடிப்படை வசதிகளை அமுலாக்குவதற்காக பெக்கோலோடர், கலீபவுசர், நீர்பவுசர், மோட்டார் கிறேடர் போன்ற இயந்திரசாதனங்களும் நிதி ஏற்பாட்டிற்கு மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தன. எனினும், நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படை வசதிகளை இனங்காண்பதற்கும் இலக்கை அடைவதற்கும் சபை தவறியிருந்தது.

## 3.3 இனங் காணப்பட்ட இழப்புகள்

(அ) சபையானது சேவை உடன்படிக்கையின் அடிப்படையில் பணியலமர்த்திய 09 ஊழியர்களுக்கு சபரகமுவ மாகாண சபையின் தலைமைச் செயலாளரால் நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்ட பின்னரும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 12 சதவீதம் சபையின் பங்களிப்பாகவும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு சபையின் பங்களிப்பாக 3 சதவீதமும் வழங்கப்பட்டமையால் சபையின் நிதியத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 85,598 ஆகும்.

(ஆ) ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2011 ஜுலை 20 ஆந் திகதிய 02/2011 ஆம் இலக்க (திருத்தம்) ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களால் ஆட்சேர்க்கப்படும் சமயாசமய, தற்காலிக, பிரதியீட்டு, நாளாந்தச்

சம்பளம் பெறும் சகல ஊழியர்களும் அரசாங்க சேமலாப நிதியத்தில் பங்களிப்புச் செய்வதற்கான நியமனம் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், 2015 ஆம் ஆண்டினபோது ஆட்சேர்க்கப்பட்ட 10 ஊழியர்கள் அரசாங்க சேவை ஊழியர் சேமலாப நிதியத்தில் பங்களிப்புச் செய்யாது ஊழியர் சேமலாப நிதியத்தில் பங்களிப்புச் செய்யுமாறு நடவடிக்கை எடுக்கப்பட்டதால் 2015 ஆம் ஆண்டில் மாத்திரம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 49,498 வழங்கப்பட்டு சபையின் நிதியத்திற்கு இழப்பு ஏற்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கென நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 22 செலவின விடயங்களது கூட்டுத் தொகையான ரூபா 7,097,500 நூறு சதவீதமும் 5 விடயங்களது ரூபா 1,466,622 கூட்டுத் தொகையான நிதி ஏற்பாட்டில் 75 சதவீதமுமாக ரூபா 8,564,122 கூட்டுத் தொகை எதிர்பார்த்த பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

1988 நிதி மற்றும் நிர்வாக விதிக் கோவையின் 5(7) இன் பிரகாரம் நிதி மற்றும் களஞ்சியங்கள் சம்பந்தமாகப் போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாடற்ற பொறுப்புகள்

சபைக்குச் சொந்தமான வங்கிக் கணக்கொன்றில் ரூபா 46,582 மீதியானது 2013 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடற்றிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) சொத்து முகாமைத்துவம்